RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s253

OPEN ACCESS

# தமிழகக்கோயில் சிற்பங்களில் இராம இராவணப் போர்க்காட்சிகள்

ச. ஜெயஸ்ரீ [அ, *]

[அ] தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை-625004, தமிழ்நாடு, இந்தியா.

# Rama Ravana Battle Scenes in Tamil Temple Sculptures

S. Jeyashree [a, *]

[a] Department of Tamil, Mannar Thirumalai Naicker College, Pasumalai, Madurai-625004, Tamilnadu, India

* Corresponding Author:
jeyashree96241@gmail.com

Received: 11-03-2021
Revised: 01-02-2022
Accepted: 07-02-2022
Published: 28-02-2022

Check for updates

## ABSTRACT

The Ramayana and the Mahabharata are immortal epics that are the treasury of Indian culture. Both epics convey the values and ideals that people need. The Ramayana written in the Northern language by Valmiki is in some way the source for other Indian language Ramayanas. Kambana in Tamil and Konaputharetti in Telugu have composed Kambaramayana and Iranganatha Ramayana respectively. Sculptures can be found in the temples of Tamil Nadu including these three language Ramayanas. Thus, it is possible to realize that literature and art are interrelated. Many of the Alvars in the Vaishnava literary four-thousandth Prabhupada exemplify the message of Ramavatara. Among the Alvars, Kulasekara gives the Ramavatara reference. References to the Ramayana are also baked into vegetarian literature. The Ashoka Pillar of the Mauryan period is the beginning of the stone sculpture. Horoscope Ramayana messages in India are inscribed on Buddhist monuments. Although Rama, Krishna and Narasimhan are notable among the three incarnations of the Vaishnava deity Thirumal in Tamil Nadu, the influence on the Ramayana is due to the large number of sculptures about Rama. The Vedic Cholas in Tamil Nadu have created Vaishnava Ramayana sculptures in their temples. The influence of Vaishnavism was greatest during the Vijayanagara Nayak period following the Chola period. The Vijayanagara Nayaks built roundabouts, planes, towers, etc., along with the foundations of the temple. Of these, sculptures were placed on stones and sutas. Ravanavatha is featured in the war to fulfill the purpose of Ramavatar. The battle of Rama Ravana and Ravanavatha can be seen in the temples of Tamil Nadu as sculptures of this event.

**Keywords:** Ramayana, Mahabharata, Battle Scenes, Sculptures

## முன்னுரை

இராமாயணம் மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள் இந்தியா மற்றும் ஆசிய நாடுகளில் கதைத் தொகுதிகளாகக் காணக்கிடைக்கின்றன. இவ்விதிகாசங்களில், வால்மீகி வட மொழியில் இயற்றிய இராமாயணமே ஆதிகாவியமாக உள்ளது. இதனைத் தமிழில் தழுவி எழுதிய கம்பன் சில மாற்றங்களோடு படைத்துள்ளான். இந்தியாவில் பல்வேறு வடிவங்களில் நிலவிய இராமாயணம், கோயில்களில் சிற்பங்களாக்கப்பட்டு, மக்களின் வாழ்விற்குத் தேவையான அறக்கருத்துக்களை எடுத்துரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருகின்றன. சிற்பங்கள் காலம் கடந்து நிற்கக் கூடியவை. அவ்வகையில் இச்சிற்பங்களை கோயில்களில் மண்டபங்கள், தூண்கள் போன்ற இடங்களில் கலை அழகுடன் இடம்பெறச் செய்தனர்.

தமிழகத்தில் இராமாயணச் சிற்பங்கள் சோழர்காலத்து கோயில்களில் இருந்தாலும் நாயக்கர் காலக் கோயில்களிலேயே அதிகமாகக் காணமுடிகின்றது (Adhinarayana, 2001). நாயக்கர் காலத்தில் வைணவ செல்வாக்கின் காரணமாக கோயில்கள் விரிவு படுத்தப்பட்டு கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த நிலையினைப் பார்க்க முடிகிறது.

இராமாயணத்தின் யுத்தகாண்டம் இராமனின் அவதார நோக்கத்தினையும் இராவணன் அழிவினையும் சுட்டுகிறது. இக்காண்டத்தின் இராம இராவணப் போர் நிகழ்வுகளைத் தமிழகக் கோயில்களில் சிற்பங்களாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன (Banerjee, 1986). மூவுலகிற்கும் இன்னல் விளைவித்த இராவணனை இராமன் அழித்தது அறத்தின் வெற்றி என்றக் கருத்தினை விளக்குகிறது.

## யுத்தகாண்டம்

இராமாயணத்தின் ஆறாவது காண்டமாகத் திகழ்வது யுத்தகாண்டமாகும். வால்மீகி இராமாயணத்தில் யுத்தகாண்ட நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்படுகின்றன. அதனை அடியொற்றிய கம்பராமாயணத்தின் பெருமையெல்லாம் இவ்யுத்தகாண்டத்தில் தான் காணப்படுகிறது இராமகாதையின் நோக்கமாகிய இராவணின் அழிவு இக்காண்டத்தில் இடம்பெறுகிறது (Avvai Natarajan, 1980). யுத்தகாண்டத்தின் தொடக்கம் விபீடணன் அடைக்கலத்தோடு தொடங்குகிறது. பின்னர் வானரங்களின் உதவியால் இலங்கைக்குச் சேதுபந்தனம் அமைக்கப்படுகிறது. இலங்கை சென்று இறங்கிய இராமனது படைகள் யுத்தத்தில் கும்பகர்ணன், இந்திரஜித்து போன்றோரை வதைத்தபின் இராவணவதை இடம்பெறுகிறது (Rajaji, 1961).

## இராம இராவணப்போர்

இராவணன், இந்திரஜித்து போரில் இறந்த செய்தி கேட்டு அரற்றிப் புலம்புகிறான். இராவணன் மந்திரிகளுடன் ஆலோசித்து இராம இலக்குவணரை வானர சேனைகளோடு எதிர்கொள்ள, படைத்தளபதி பிரகஸ்தனைப் போரிட அனுப்புகிறான். அவன் போரில் மாண்டதை அறிந்து சீற்றத்துடன் இராவணன் போருக்கு எழுகிறான். இராவணன் இலக்குவணன், சுக்கிரீவன், அனுமன் ஆகியோருடன் போரிட்டுக் கடைசியாக இராமனுடனும் போரிட்டுத் தோல்வியைத் தழுவித் தன் இருப்பிடம் சேருகிறான். இந்நிகழ்வாக கோபுரப்பட்டி அவனீஸ்வரமுடையார் கோயில் அதிட்டானத்திலும், காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் கோயில் கல்யாண மண்டபத்தின் நான்காவது வரிசை நான்காவது தூணிலும் இரண்டாவதுவரிசை ஐந்தாவது தூணிலும் உள்ளது. இக்காட்சியே ஸ்ரீரங்கம் இரங்கநாதர் கோயில் சேசாங்கிரிராயர் மண்டபத்தின் மூன்றாவது வரிசை, முதல் தூணில் சங்கு சக்கரங்களுடன் விஷ்ணுவை அனுமன் தோளில் தூக்கிச் செல்லும் காட்சி இருக்கிறது படம் 1-யை பார்க்க.



படம் 1. இராமனை அனுமன் தோளில் தூக்கிச் செல்லும் காட்சி

இச்சிற்பம் இராமனை விஷ்ணுவாகப் பார்க்கின்ற நிலையினை உணர்த்துகிறது. இதன் தொடர்பாக மன்னார்குடி இராசகோபாலசுவாமி கோயில் மோகினி கோபுரத்தின் முதல் தளத்தில் அனுமனின் மீது அமர்ந்துள்ள இராமனுக்கு நான்கு கைகள் உள்ளன. இச்சிற்பக்காட்சி பிற்காலத்தில் இராமனைத் திருமாலாகக் கண்ட மக்களின் சமய உணர்வைக் காட்டுகிறது. இதே நிகழ்வு தாடிக்கொம்பு சௌந்தர்ராசப்பெருமாள் கோயில் முன்மண்டபத்தில் (படம் 2-யை பார்க்க) நாங்குனேரி வானமாமலை கோயில் கோபுரத்தின் இரண்டாவது தளத்திலும், சுசீந்திரம் தாணுமாலயன் கோயில் செண்பகராமன் மண்டபத்தின் முதல்வரிசை ஏழாவது தூணிலும், மன்னார்குடி இராசகோபாலசுவாமி கோயில் தெற்குச் சுவரின் கண்டத்திலும் காணப்படுகிறது. இச்சிற்பக்காட்சி வால்மீகி, இரங்கநாத இராமாயணங்களைத் தழுவியுள்ளது.



படம் 2. இராமனை அனுமன் தோளில் தூக்கிச்செல்லுதல்

இந்நிகழ்வு வால்மீகி இராமாயணத்தில், முதலில் இந்திரஜித்து போரிடச் செல்கிறான். பின்னர் படைத்தளபதிகள் போரிட, அதன் பிறகே இராவணன் போரிடுவது அமைந்துள்ளது. இராமன் இராவணனை எதிர்த்துத் தாக்கும் போது பல இடங்களுக்கும் அவனைப் பின் தொடர வேண்டியிருப்பதால் அனுமன் தன் தோள் மீது ஏறிப் போர் செய்யும்படி வேண்டிக் கொள்கிறான். இதன்படி இராமனும் அனுமன் தோளின் மீது அமர்ந்து இராவணனைத் தாக்கித் தோல்வியுறச் செய்கிறான். கம்பன் முதலில் படைத்தளபதிகளைப் போரிடச் செய்து அவர்களைத் தொடர்ந்து இராவணன் போரிடுவதாகப் படைத்துள்ளான் (Srinivasa Iyengar, 1963). இரங்கநாத இராமாயணம் வால்மீகியைத் தழுவியுள்ளது (Gopalakrishnamachariyar, 1967).

இராவணன் தன் புதல்வர்களும் படைத்தளபதிகளும் மாண்டபிறகு கடைசியாகப் போரிடச் செல்கிறான். இராமன் இராவணனோடு போரிடும் காட்சியும் சிற்பங்களில் உள்ளது. புஞ்சை நல்துணையீஸ்வரர் கோயில் அதிட்டானத்தில் இராமன் அம்பு எய்கிறான். மேலே பறந்தவாறும் கீழே அமர்ந்தபடியும் பல அரக்க வானர உருவங்கள் இருக்கின்றனர். இருவர் வீழ்ந்து கிடக்கின்றனர். இக்காட்சி போர்க்களத்தைச் சித்திரிப்பதாக உள்ளது. 'சோழர்காலத்துச் சிற்ப உடற்கூறானது பல்லவர்களின் சிற்பக்கலையை விட எளிமையானது' என்ற கருத்திற்கேற்ப இக்கோயில் சிற்பங்கள் காணப்படுகின்றன (Adinarayana, 2001). தர்மபுரி காமாட்சியம்மன் கோயில் அதிட்டானத்தில் இராமன் அம்பு எய்தபோது பின்புறம் அனுமன், விபீடணன், இலக்குவணன் ஆகியோர் நிற்கின்றனர். எதிரில் இராவணப் படைகள் தாக்குகின்றன. அரக்கன் ஒருவன் தலைக்குப்புற விழுகின்ற நிலையாகவும் ஒருவன் கதையைத் தூக்கி ஓடி வருவதாகவும் சிலர் ஓடுகின்ற நிலையிலும் உள்ளது. இக்காட்சி இராம, இராவணப் போர் நிகழ்வைச் சுட்டுகிறது எனலாம். திருபுவனம் கம்பகேஸ்வரர் கோயில் மகாமண்டப அதிட்டானத்தில் பத்துத் தலைகளுடன் இராவணன் தேரிலிருந்து போரிட, எதிரில் இராமனும்

தேரிலிருந்தவாறு தாக்குகிறான். இதே காட்சி மன்னார்குடி இராசகோபாலசுவாமி கோயில் மோகினி கோபுரத்திலும் உள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் ஆதிகேசவப்பெருமாள் கோயில் கோபுர வாயிலின் மூன்றாவது வரிசையில் இராவணன் தேரில் நின்றவாறு அம்பு எய்கிறான். எதிரில் அனுமன் வணங்கிய நிலையில் இருக்கிறான். அனுமன் தோளில் இராமன் அமர்ந்து இருக்கிறான். இக்காட்சி அனுமன் வணங்கி தன் மீது அமரும்படி கேட்டுக் கொள்வதையும் இராமனும் இசைந்து அனுமன் மீதிருந்தபடி போரிடுவதையும் காட்டுகிறது. காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயில் உருத்ராட்ச மண்டபத்தூணில் இராமன் அம்பு எய்வதும் எதிரில் இராவணன் சூலாயுதத்தை எடுத்துப் போரிடுவதும் காட்சியாக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் இராமாயண நிகழ்வினைச் சுட்டி நிற்கிறது படம் 3-யை பார்க்க.



படம் 3. இராம இராவணப்போர்

இராவணன் இராமனைச் சூலத்தால் தாக்குகிறான். இந்நிகழ்வு வால்மீகியிலும் கம்பனில் சற்று விரிவாகவும் கூறப்பட்டுள்ளது. இராம இராணவனன் போரில் இராவணன் விடுத்த சூலத்தை இராமன் காண்பதாகக் கம்பன் காட்டுகிறான். இக்கோயிலில் இதனையடுத்த காட்சி, பத்துத் தலைகளுடன் இராவணன் இராமனுடன் போர்புரிவது காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பங்களின் அமைப்பு இராமாயண நிகழ்வை அடுத்தடுத்துச் சுட்டிச் செல்கிறது (Gopalakrishnamachariyar, 1967).

சுசீந்திரம் தாணுமாலயன் கோயில் செண்பகராமன் மண்டபத்தில் முதல் வரிசை ஏழாவது தூணில் இராமன் இடதுகையில் வில்லையும் வலதுகையில் அம்பை எடுத்தவாறும் சிற்பங்களாக உள்ளன. இதனையடுத்த சதுரத்தில் குதிரை பூட்டிய தேரில் தேர்ப்பாகன் இருக்க இராவணன் நின்றவாறு அம்பு எய்கிறான். இக்காட்சி இடமின்மை காரணமாக பிரித்துக் காட்டப்பட்டுள்ளது எனக் கருதலாம். மதுரை கூடலழகர்பெருமாள் கோயில் விமானத்தில் இராவணன் போர்க்காட்சியைப் பார்க்க முடிகிறது. யாளிவரியில் இராவணன் பத்துத் தலைகள் இருபது கைகளோடு சுக்கிரீவனுடன் போரிடும் காட்சியும் உள்ளது. இக்காட்சி இராம இராவணன் போரில் சுக்கிரீவன் போரிட்ட காட்சியையும் விளக்குவதாக உள்ளது.

இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில் மூன்றாம் பிரகாரத்தின் மேல்பகுதி நாடகச் சட்டத்திலும் அனுப்ப மண்டபத்திலும் இராம இராவண போர்க்காட்சி காட்டப்பட்டுள்ளது. கலபாத சிற்பங்களில் இராமாயணக் கதைத் தொகுதிகளைச் செதுக்குவது 'முற்காலச் சோழர் காலத்தில் பெருவழக்காக இருந்ததைப் போன்று நாடகச்சட்டத்தில் இச்சிற்பங்களை வடிப்பது விஜயநகர நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சிறப்பிடம் பெற்றது' எனலாம். அயோத்தியாபட்டிணம் கோதண்டராமன் கோயில் கோபுரத்தின் இரண்டாவது தளத்தில் பத்துத் தலைகளுடன் இராவணன் நிற்கிறான். பக்கத்திற்கு ஒருவராக சுக்கிரீவன், அனுமன், அங்கதன் ஆகியோர் கைகளைத் தூக்கியவாறு நிற்கின்றனர். இக்காட்சி இராவணன் போருக்கு வந்த நிகழ்வாகக் குறிப்பிடலாம். இதனையடுத்து இராவணன் இராமனுடன் போரிட்டு வீழ்ந்த காட்சி மிகச் சிறப்பாக உள்ளது. இராவணனின் ஐந்து தலைகள் இராமன் அம்பால் அறுபட்டுக் கழுத்திலிருந்து தனியே காட்டப்பட்டுள்ளன. கீழே ஐந்து தலைகள் கிடக்கின்றன. இவை

இராவணனின் துண்டிக்கப்பட்ட தலைகளாக உள்ளன படம் 4-யை பார்க்க. இச்சிற்பம் இராமன் இராவணனின் பத்துத் தலைகளை வீழ்த்திய காட்சியைப் படம் பிடித்துக் காட்டுவது போல உள்ளது. தஞ்சாவூர் கலியுகவெங்கடேசப் பெருமாள் கோயில் கொடிமர மண்டபச் சுவரிலும் போர்க்காட்சி காட்டப்பட்டுள்ளது. இந்நிகழ்வு வால்மீகி இராமாயணம், கம்பராமாயணம் மற்றும் இரங்கநாத இராமாயணங்களில் மாற்றமின்றிக் காணப்படுகின்றது (Srinivasa Iyengar, 1963).



படம் 4. இராம இராவணப்போரும் வதையும்

## இராவணன் வதை

இராவணன் இராமனை வெற்றி கொள்ள சுக்கிரன் என்ற தேவனிடம் வணங்கிச் சரணடைகிறான். சுக்கிரன் இராவணனை யாகம் வளர்த்துப் பயனடையச் சொல்கிறான். இந்நிகழ்வு ஸ்ரீரங்கம் இரங்கநாதர் கோயில் கருட மண்டப அதிட்டானத்தில் இராவணன் இருபது கைகளுடன் வணங்கி நிற்கிறான். எதிரில் ஒருவர் கமண்டலத்தை இடது கையில் வைத்து வலது கையை உயர்த்தி ஆசி வழங்கியபடி நிற்கிறார். இக்காட்சி இராவணன் சுக்கிரனிடம் வணங்கி ஆசி பெறுவதாக இருக்கலாம். இச்சிற்பத்தை அடுத்து இராம இராவணன் போர் நிகழ்வு உள்ளது. இதே பகுதியில் இராவணன் பத்துத் தலைகளுடன் குத்துக் காலிட்டு அமர்ந்து யாகம் செய்கிறான். யாகத்தில் தீ எரிகிறது. இதனையடுத்து அனுமன் தீயில் எதையோ போடுகிறான். இராவணன் யாகம் செய்யும் காட்சி இதனையடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் இராவணன் இராமனை வெல்ல யாகம் வளர்ப்பதும் அனுமன் அதனை அழிப்பதும் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத் தொகுதியில் இரங்கநாத இராமாயணக் கதை அமைப்பைக் காண முடிகிறது.

கூடலூர் கூடலழகிய பெருமாள் கோயில் சுற்றுச் சுவரில் பத்துத்தலைகளுடன் இராவணன் அமர்ந்திருக்கிறான். எதிரே ஒரு பெண் நிற்கிறாள் மேல்பகுதியில் அரக்கர்கள் இருக்கின்றனர். இப்பெண் மண்டோதரியாக இருக்கலாம். இவள் இராவணனுக்கு அறிவுரை கூறுவதாகக் கொள்ளலாம். இச்சிற்பத்திற்கு அடுத்ததாகப் போர்க் காட்சி இருப்பது பொருத்தமாக இருக்கிறது. இராவணன் தன் சகோதரர்கள், படைத் தளபதிகளில் சிலர் கூறிய அறிவுரைகளையும் கேளாது பல இன்னல்களை எதிர் கொள்கிறான். கடைசித் தருவாயிலும் தன் மனைவி மண்டோதரி கூறிய அறிவுரைகளையும் ஏற்காது. இராமனிடம் போரிட்டு வதைபடுகிறான். புஞ்சை நல்துணையீஸ்வர்ர் கோயில் அதிட்டானத்தில், இராம இராவணப் போர்க் காட்சியை அடுத்து இராவணன் இறந்து கிடக்கும் காட்சி சிற்பமாக உள்ளது. இதே காட்சி விளக்கமாக தர்மபுரி காமாட்சியம்மன் கோயில் அதிட்டானத்தில் உள்ளது. இராவணன் கதை ஏந்தியவனாய் இராமனிடம் போரிட்டு ஒரு தலை ஆறு கைகளோடு சாய்ந்து இடது காலை ஊன்றி தலையில் கை வைத்திருக்கிறான். இராம இலக்குவணன் வில்லுடன் நிற்கின்றனர். அருகில் அனுமன் விபீடணன் இருக்கிறார்கள். இராவணப் படைகள் சரணடைகின்றன.

திருபுவனம் கம்பகேஸ்வரர் கோயில் மகாமண்டப அதிட்டானத்தில் இராவணன் வதைபட்டுக் கிடப்பதும், மண்டோதரி புலம்பி நிற்பதும் சேர்த்துக் காட்டப்பட்டுள்ளது. அருகில் இராமன் நிற்கிறான். காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயில் உருத்ராட்ச மண்டபத் தூணில் பத்துத் தலைகளோடு இராவணன் இராமனின் அம்புபட்டுக் கீழே விழும் காட்சி உள்ளது. இதே காட்சி ஸ்ரீரங்கம் இரங்கநாதர் கோயில்

கருடமண்டப அதிட்டானத்தில், இராவணன் அம்புபட்டு மகுடத்துடன் வீழ்கின்ற அமைப்பில் சிற்பமாக்கப்பட்டுள்ளது. இதே வரிசையில் தெளிவுறக் காட்டும் வகையில் இராவணன் வதைக் காட்சி அமைந்துள்ளது. அனுமன் சுக்கிரீவன் வணங்கி நிற்க விபீடணன் கதையுடன் கையை உயர்த்தியபடியும், இலக்குவணன் வில்லுடனும் நிற்கின்றனர். இராமன் தேரிலிருந்தபடி அம்பு எய்ய, அவ்வம்பு பறந்து செல்வதைக் காணமுடிகிறது. எதிரில் இராவணன் இருபது கைகளுடன் அம்பு எய்யும் காட்சியும் மகுடம் விழ அம்புபட்டு இராவணன் தலைகுப்புற விழுகின்ற காட்சியும் உள்ளது. (படம் 4-யை பார்க்க.) இச்சிற்பம் போர்க்காட்சியைப் படம் பிடித்துக் காட்டிய நிலையில் இருக்கிறது. மதுரை மதனகோபாலசுவாமி கோயில் சுற்றுச் சுவரில் உள்ள சிற்பத்தில் இராமன் அம்பு எய்கிறான். எதிரில் இராவணன் பத்துத் தலைகள், இருபது கைகளுடன் பாதி உருவமாக இருப்பது போன்று காட்டப்பட்டுள்ளது. (படம் 5-யை பார்க்க.) அதன் கீழ்ப்பகுதியில் ஒருவன் வீழ்ந்து கிடப்பது போன்று சிற்பமாக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் இயக்கநிலைச் சிற்பமாக இராவணனின் வீழ்ச்சியைக் காட்டுகிறது.

மதுரை கூடலழகர் பெருமாள் கோயில் விமானத்தில் இராவணன் வதையும் கோபுரத்தின் முதல் தளத்தில் இராமன் அனுமன் தோளில் அமர்ந்து எய்த அம்பினை, இராவணன் தன் மார்பில் குருதிவரத் தாங்கியவனாய் இருக்கும் காட்சியும் சுதைச்சிற்பங்களாக உள்ளன. (படம் 6-யை பார்க்க) இக்காட்சி வால்மீகி இராமாயணத்தைத் தழுவி சிற்பமாக்கப்பட்டுள்ளது. கூடலூர் கூடலழகிய பெருமாள் கோயில் சுற்றுச்சுவரில் இராம இராவணன் போரும், இராவணன் கீழே வீழ்ந்து கிடப்பதும், மண்டோதரி புலம்பியவாறு அமர்ந்திருப்பதும் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன (Srinivasa Iyengar, 1963).



படம் 5. இராவணன் வதைபடம்



படம் 6. இராம இராவணப்போரும் வதையும்

இராவணன் இறந்த பிறகு இராமனின் ஆணைப்படி விபீடணன் தன் சகோதரனுக்கு இறுதிக்கடன் செய்கிறான். இந்நிகழ்வு கூடலூர் கூடலழகிய பெருமாள் கோயில் சுற்றுச்சுவரில், பத்துத் தலைகளுடன் இராவணன் சிதையில் படுத்திருக்க மண்டோதரி அமர்ந்த நிலையில் தலைவிரித்துப் புலம்புவதும், விபீடணன் நீர்க்குடம் தலையில் வைத்துச் சுற்றி வருவதாகவும் சிற்பம் உள்ளது.

இக்காட்சி சிதைக்குத் தீயிடுவதற்கு முன் நிகழ்த்தும் சடங்கினைக் காட்டுகிறது. ஸ்ரீரங்கம் இரங்கநாதர் கோயில் கருடமண்டப அதிட்டானத்தில் இராவணன் படுத்திருக்கிறான். அவனது இருபக்கத்திலும் தலைவிரித்தவாறு கைகளைத் தூக்கிப் புலம்பிய நிலையில் மனைவியர் அமர்ந்திருக்கின்றனர். அடுத்த காட்சியாக ஒரு மேடையில் இராவணனைக் கிடத்தியிருக்க அவன் மேல் தீ எரிகிறது. அவன் தலைப்பக்கம் விபீடணன் வலதுகையை உயர்த்தியபடி இடதுகையை மேடை மேல் வைத்திருக்கிறான். இச்சிற்பம் விபீடணன் சகோதரனுக்கு இறுதிக் கடன் செலுத்தும் விதத்தைப் புலப்படுத்துகிறது. (படம் 7-யை பார்க்க.) மேற்கண்ட சிற்பக் காட்சிகள் சமூகப் பழக்க வழக்கங்களைப் பின்புலமாகக் கொண்டவை எனலாம்.



படம் 7. இராவணன் சீதைக்கு விபீடணன் தீ வைத்தல்

இராவணன், இராமனிடம் போரிட்டு இறப்பதை வால்மீகி காட்டுவார் ‘மூவுலகுக்கும் இன்னல் விளைவித்த இராவணன் அழிவு அறத்தின் வெற்றியாகும்’ (Srinivasa Iyengar, 1963). இராமன் பெற்ற வெற்றிகள் வீரத்தால் விளைந்தவை எனலாம் (Arunagirinathar, 1995). கம்பன், இராவண வதையை முதல் நூலின் படியே படைத்திருந்தாலும் சில மாற்றத்தோடு விரித்துக் கூறியுள்ளான். மண்டோதரி புலம்பலில் இராவணன் சீதையின்பால் கொண்ட காதலே அவனைக் கொன்றுவிட்டது என்ற கருத்தைக் கம்பன் வற்புறுத்துகிறான் (Gopalakrishnamachariyar, 1967). இராவணன் இறந்தபின் மண்டோதரியும் உயிர் நீத்ததாகக் கூறுகிறான். தமிழ்ப் பண்பாட்டின்படி கணவன் இறந்தபின் தனக்கு வாழ்வு இல்லை என்று உடன் உயிர் நீப்பதாகக் கம்பன் காட்டியிருக்கிறான். இராவணன் உயிர் நீத்த பிறகு அவன் மார்பினைத் தழுவி அரற்றி உயிர் நீத்த மண்டோதரி கற்புத் தெய்வமாகவே விளங்குகிறாள் (Arunagirinathar, 1995).

## முடிவுரை

இந்திய இதிகாசங்களில் ஒன்றான இராமாயணம் படைக்கப்பட்டதன் நோக்கமே அக்கால மக்களுக்குச் சொல்லவேண்டிய விழுமியங்களைச் சொல்வதற்காகத்தான் என்றால் மிகையாகாது. இவ்விதிகாசத்தில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துக்கள் அக்காலத்தில் நடைமுறையில் இருந்து வந்த கலை வடிவங்களின் வாயிலாக மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்க வேண்டும். இராமாயணங்களில் காலத்தால் முற்பட்டதாக வால்மீகி இராமாயணம் அமைகிறது. இதனையடுத்து கம்பன் தம் காலத்திற்கு முன் தமிழில் எழுந்த சங்க இலக்கியம், இரட்டைக் காப்பியங்கள், பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்வியப்பிரபந்தம் ஆகிய இலக்கியங்களில் பயின்று வந்த இராமாயணச் செய்திகளைக் கொண்டும் வால்மீகி இராமாயணத்தை அடியொற்றியும் தம் இராமாயணத்தைப் படைத்துள்ளான். வால்மீகியை அடியொற்றியே கோனபுத்தாரெட்டியால் தெலுங்கில் படைக்கப்பட்ட ரெங்கநாத இராமாயணமும் அமைந்துள்ளது. கி.மு.3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மௌரியர்களால் நிறுவப்பட்ட தூண்களில் புத்தஜாதக இராமாயணம் கல் எழுத்துக்களாகச் செதுக்கப்பட்டுள்ளமை, கோயில்களில் இராமாயணச் சிற்பங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது எனலாம். கி.பி.5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குப்தர்களது காலத்தில் பரவலாக இராமாயணச் சிற்பங்கள் இருந்தன. சோழர்கள் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும் சிவனுக்கென்று கட்டிய கோயில்களில் சைவ சமயப் புராணச் சிற்பங்களோடு வைணவ சமயம் தொடர்பான இராமாயண கதைச் சிற்பங்களையும் படைத்துள்ளனர் என்பதை இவ்வாய்வு வெளிக்கொணர்கிறது. விஜயநகர-நாயக்கர் காலத்தில் கோயில்களில் விரிவாக்கம் அடைந்ததன் காரணமாக அதிக அளவில் மண்டபங்களும் கோபுரங்களும் தோற்றுவிக்கப்பட்டதால் அவற்றில் சிற்பங்களையும் அதிக அளவில் இடம்பெறச் செய்தனர். இதன் விளைவாக இராமாயணச் சிற்பங்கள் விஜயநகர-நாயக்கர் காலத்தில் இடம்பெற்றுள்ளன. தர்மபுரி காமாட்சியம்மன் கோயிலில் யுத்தகாண்ட நிகழ்வுகள் அதிக அளவில் சிற்பங்களாக இடம் பெற்றுள்ளன. தமிழகத்தில் சோழர் காலத்தை விட விஜயநகர -நாயக்கர்

காலத்திலேயே அதிக அளவிலான யுத்தகாண்ட நிகழ்வுகள் குறித்த சிற்பங்கள் இயக்கநிலையிலும் காணப்படுகின்றன. இச்சிற்பங்களில் இராம இராவண யுத்தமே பேரிடம் பெறுகிறது. இராவணன் சிதைக்கு விபீடணன் தீ மூட்டும் சிற்பம் நாயக்கர் காலச் சமுதாய பழக்கவழக்கங்களை உள்ளடக்கிய சிற்பமாக உள்ளது. இராமாவதாரத்தின் நோக்கமான இராவணனின் அழிவு யுத்தகாண்டத்தில் இடம் பெறுவதால் இக்காண்டத்தின் நிகழ்வுகள் அதிக அளவில் காணப்படுகின்றன எனலாம்.

## References

Adhinarayana. M., (2001) Decorative Arts of South Indian Temples, Bharathiya Kalaprakashan, Delhi, India.

Arunagirinathar, A., (1995) Kamban Kaattum Theeraakaadhalan, Vanathi Pathippagam, Chennai, India.

Avvai Natarajan, (1980) Kambar katchi, Sekar Pathippagam, Chennai, India.

Banerjee, P., (1986) Rama in Indian Literature Art and Thought, Volume I & II, Sundeep Prakashan, Delhi

Gopalakrishnamachariyar, (1967) Kambaramayanam, Vai, Mu., Gopalakrishnamachariyar, Chennai, India.

Rajaji, (1961) Bhakthineri, Bharathi Pathippagam, Chennai, India.

Srinivasa Iyengar, (1963) Srimath Valmiki Ramayanam, The Little Flower Co in T Nagar, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License